தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30-11-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தேசிய மாணவர் படை நாள் விழா

இந்தியாவில் தேசிய மாணவர்படை நாள் நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 4 மற்றும் 5 தமிழ்நாடு பட்டாலியன் சார்பாக தேசிய மாணவர்படை மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் வண்ணம் தீட்டும் போட்டிகள் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்பைப் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் கு. ராமாசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். அவரது உரையில் மாணவர்களை ஊக்கப்படுத்தியும் தேசிய மாணவர் படையின் முக்கியத்துவத்தையும் உணர்த்தினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவரும் கோவை விமானப்படை தேசிய மாணவர்படை அதிகாரியுமான அனில் ஜே. மேத்யூஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் இந்திய ராணுவத்தில் தனது அனுபவங்களை மாணவர்களிடையே பகிர்ந்து கொண்டார். இந்திய ராணுவத்தில் வேலைவாய்ப்பு மற்றும் அதற்கு தங்களை தயார்படுத்துவது குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண்மைக் கல்லூரி முதன்மையர் முனைவர் ச.மகிமைராஜா தேசிய மாணவர் படையின் நோக்கத்தையும் தேசியப் பாதுகாப்பில் அவர்களின் முக்கியத்துவத்தையும் பாராட்டினார். ஜே.சீ. மேல்நிலைப் பள்ளி முதன்மையர் திருமதி. புனிதா சந்திரசேகர் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். இதில் பல்வேறு கல்லூரிகள் மற்றும் பள்ளிகளைச்சார்ந்த சுமார் 250 தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கோவை ஐ பௌண்டேசன் சார்பில் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. சுமார் 250 தேசிய மாணவர் படை மாணவர்கள் பயன்பெற்றனர். சுதந்திரப் போராட்ட வீரர்களின்

புகைபபடக்காட்சி நடைபெற்றது. இதில் சுமார் 150க்கு மேற்பட்ட புகைப்படங்கள் பார்வையாளர்களைக் கவர்ந்தன.

முன்னதாக, தேசிய மாணவர் படை அதிகாரி கேப்டன் எஸ். மனோன்மணி வரவேற்றார். இதில் தேசிய மாணவர் படை அதிகாரிகள் திரு. கார்த்திகேயன், திருமதி. தீபா, திரு. இருதயராஜ், திரு. அருள், திரு கருணாமூர்த்தி, திரு சுரேஸ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தேசிய மாணவர் படை அதிகாரி லெப்டினன்ட கு.ம. செல்லமுத்து நன்றியுரையாற்றினார்.

விழா ஏற்பாடுகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக தேசிய மாணவர் படை அதிகாரிகள் லெப்டினன்ட் கு.ம. செல்லமுத்து மற்றும் கேப்டன் எஸ். மனோன்மணி ஆகியோர் செய்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


L UNIVERSITY
COIMBATORE
RATIONS




TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
4 & 5 TN BATTALION NCC,COIMBATORE
NCC DAY CELEBRATIONS
Date: 28.11.2015